# பொல்பிதிகம பிரதேச சபை

## குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் பொல்பிதிகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொல்பிதிகம பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பிரதம செயலாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்த தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 4,366,175 ஆக இருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,299,688 தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டிற்குரிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,066,487 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில்

கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,626,520 ஆக இருந்த போதிலும் அந்த வருமானம் கடன்பட்டோரின் கீழ் ரூபா 718,425 எனக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் வருமானக் கடன்பட்டோர் ரூபா 908,095 தொகை குறைவாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 30,401,486 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 598,587 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,303,185 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,264,738 தொகையான தொங்கல் கணக்கின் வரவு மீதி காணப்பட்டது. அவ்வாறே பல்வேறு காரணங்களுக்காக 07 சந்தர்ப்பங்களின் கீழ் கிடைத்திருந்த ரூபா 814,622 தொகை தீர்க்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வைப்புக்களின் கீழ் காணப்பட்டது.

(ஆ) கொங்கிரீட் செயற்திட்ட உபகரணக் கணக்கில் சில வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 333,115 தொகையான மீதியை இனங்கண்டு உள்ளவாறான பெறுமதி கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பலவருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற 8 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 345,497 தொகையான கணக்கு மீதி மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 11 | 15 | - |
| (ii) | வாடகை | 2,867 | 2,832 | 35 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 850 | 934 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 29,423 | 21,692 | 7,731 |

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,366,175 ஆகும்.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதேச சபையின் செயலாளர் பதவி முகாமைத்துவத்தின் உயர் வகுப்பிலுள்ள (சுப்ரா) பதவியாக இருந்த போதிலும் அது முகாமைத்துவ சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோத்தரினால் வேலை கவனிக்கப்பட்டு வந்தது. முன்பள்ளிப்பாடசாலை பராமரிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதில் கட்டுப்பாட்டாளர் பதவி ஒருவர் படியும் 2 நூலகர் பதவியும் நீண்ட காலம் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) சிற்றுழியர், காவலாளி, தொழிலாளர் போன்ற பதவிப் பெயர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 35 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் கீழ் 32 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவ்வாறே அமைய மற்றும் நாட்கூலி அடிப்படையில் அந்த பதவிகளின் பெயர்களுக்காக சபையினால் சம்பளம் வழங்கப்படுகின்ற 8 ஊழியர்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பிரதேச சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அநிநிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,763,992 ஆகக் காணப்பட்டது.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்சிசித்திட்டத்தின் கீழ் போதியளவான உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்